மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. ஆறுக்குட்டி அவர்கள்.*

திரு. வி.சி. ஆறுக்குட்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்ணை விட்டு மறைந்தாலும், மக்கள் மனதிலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியைச் சிறப்பாகச் செயல்படுத்திக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

எனது கவுண்டம்பாளையம் தொகுதிக்குட்பட்ட காளப்பட்டி, விளாங்குறிச்சி, சரவணம்பட்டி, சின்னவேடம்பட்டி மற்றும் துடியலூர் ஆகிய பகுதிகளுக்குக் கிட்டத்தட்ட 605 கிலோ மீட்டர் அளவிற்கு பைப் லைனை விரிவுபடுத்துவதற்கும், 26 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டுவதற்கும் ரூ.189 கோடி ஒதுக்கித் தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், இந்த நிதியைப் பெற்றுத் தந்து, திட்டத்தைத் தொடங்கி வைத்த கோவை மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை எனது தொகுதி மக்களின் சார்பாகத் தெரிவித்து, அமருகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 104, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. ராதாகிருஷ்ணன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

104—

கலைக் கல்லூரி

***4345—திரு. வி. ராதாகிருஷ்ணன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை தொகுதி, குத்தாலம் பேரூராட்சியில் கலைக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2018 ஜூன் 1]

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மயிலாடுதுறை தொகுதி, குத்தாலம் பேரூராட்சியில் கலைக் கல்லூரி துவங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. ராதாகிருஷ்ணன் அவர்கள்.*

முற்பகல் 10-15

திரு. வி. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில், இடையறாது சட்டப் போராட்டம் நடத்தி, காவேரி மேலாண்மை வாரியம் அமைக்கப்படும் என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பினைப் பெற்றுத் தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அண்ணன் திரு. ஓ.பி.எஸ். அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், காவேரி டெல்டா பாசன விவசாயிகள் சார்பாகவும், மயிலாடுதுறை தொகுதி மக்களின் சார்பாகவும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை சட்டமன்றத் தொகுதி, குத்தாலம் பேரூராட்சி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் 10-க்கும் மேற்பட்ட மேல்நிலைப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. ஆண்டுதோறும் 5,000-க்கும் மேற்பட்ட மாணவர்கள் 12 ஆம் வகுப்பு தேர்வு எழுதுகின்றனர். இம்மாணவர்கள் உயர் கல்வி பயில நீண்ட தூரம் பயணம் செய்து மயிலாடுதுறை, பூம்புகார், மணல்மேடு, கும்பகோணம் மற்றும் தஞ்சாவூர் ஆகிய ஊர்களுக்குச் சென்று கல்லூரிப் படிப்பினை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதனால் மாணவர்கள் மன உளைச்சலுக்கு ஆளாகின்றனர். குத்தாலம் பகுதியானது வேளாண்மைத் தொழிலை மேற்கொள்ளும் ஏழை, எளிய விவசாயிகள் வசிக்கும் பகுதியாகும்.

குத்தாலம் வட்டம், ஊராட்சி ஒன்றியங்களின் தலைமையிடமாகவும், அதனைச் சுற்றியுள்ள 57 கிராமங்களுக்கு மையப் பகுதியாகவும் அமைந்துள்ளதால், குத்தாலம் பகுதிவாழ் மாணவ, மாணவிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, மயிலாடுதுறை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட குத்தாலம் பேரூராட்சிப் பகுதியில் ஓர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை அமைத்துத் தர வேண்டுமென்பது இப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாகும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் இந்த அரசு குத்தாலம் பேரூராட்சிப் பகுதியில் ஓர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை அமைத்துத் தந்திட வேண்டுமாய் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்ற குத்தாலம் பேரூராட்சிக்கு அருகில், நாகப்பட்டினம் மாவட்டத்தில், மூன்று அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், ஐந்து அரசு நிதி உதவிபெறும் கல்லூரிகளும், 10 சுயநிதிக் கல்லூரிகளும் ஆகமொத்தம் 18 கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் இரண்டும் சேர்த்து, 20 கல்லூரிகள் அந்த மாவட்டத்திலே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.

அந்தவகையிலே பார்க்கின்றபோது, குத்தாலம் பேரூராட்சியிலிருந்து 15 கிலோ மீட்டர் தொலைவில் ஞானாம்பிகா அரசு பெண்கள் கலைக் கல்லூரியும், 28 கிலோ மீட்டர் தொலைவில் மணல்மேடு கல்லூரியும், 35 கிலோமீட்டர் தொலைவில் சீர்காழி, பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. கடந்த 2017-2018 ஆம் கல்வி ஆண்டில் பார்க்கின்றபோது, ஒப்பளிக்கப்பட்ட இடங்களிலிருந்து மாணவர்களின் சேர்க்கையின் இடைவெளியைப் பார்த்தால் அங்கே மாணவர்களின் சேர்க்கையில் காலியாக இருக்கின்ற நிலை

2018 ஜூன் 1]

உருவாக்கப்பட்டிருக்கின்றது. அதாவது அரசுக் கல்லூரிகளிலும், அரசு உதவிபெறும் கல்லூரிகளிலும் மட்டும் 387 இடங்கள் காலியாக உள்ளன. அதேபோல் இன்றைக்கு சுயநிதிக் கல்லூரிகளில் 3,222 இடங்கள் காலியாக இருக்கின்றன.

மேலும், கடந்த 2011 முதல் 2018 வரையிலான 7 ஆண்டுகளில் கல்லூரிகளில் மாணவர்களின் சேர்க்கை கூடுதலாக இருப்பதால், இளநிலைப் படிப்பில் ஒரு பாடப் பிரிவும், முதுநிலைப் படிப்பில் 7 பாடப் பிரிவுகளும், M.Phil-*ல் ஒரு பாடப் பிரிவும்,* Ph.D.-*ல் இரண்டு பாடப் பிரிவுகளும் புதிதாக துவங்கப்பட்டன. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு மற்றும் அவருடைய வழியிலே தொடர்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்களின் அரசாலும் அரசுக் கல்லூரிகளில் கூடுதலாக 20 சதவிகித இடங்களும், அரசு உதவிபெறும் கல்லூரிகளில் கூடுதலாக 15 சதவிகித இடங்களும், அதேபோல, சுயநிதிக் கல்லூரிகளில் கூடுதலாக 10 சதவிகித இடங்களும் ஒதுக்கீடு செய்யப்பட்டதால் கடந்த இரண்டு ஆண்டுகளில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் படிக்க வேண்டும் என்று விருப்பப்பட்ட மாணவர்கள் அத்துணை பேருக்குமே இடம் கிடைக்கும் வாய்ப்பு உருவாக்கப்பட்டது. அந்தவகையில், இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்ட குத்தாலம் பேரூராட்சியிலே மாணாக்கர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையிலே புதிதாக ஒரு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. ராதாகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. வி. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரும் கல்வியாண்டிலாவது என்னுடைய கோரிக்கையை மறுபரிசீலனை செய்து குத்தாலம் பேரூராட்சியில் ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை அமைக்க வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார் அவர்கள்.*

முற்பகல் 10-20

திரு. எச். வசந்தகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி தொகுதியிலுள்ள பரப்பாடியில் ஒரு கலைக் கல்லூரி அமைக்க வேண்டுமென்று அந்த ஊர் பொது மக்களும், சுற்று வட்டார மக்களும் என்னிடத்தில் வேண்டுகோள் வைத்தார்கள். அதன்மூலம் 5½ ஏக்கர் நிலத்தை வாங்கி, அதை நமது ஆளுநர் பெயரில் பதிவு செய்துவிட்டோம். தமிழக அரசு கலைக் கல்லூரியை அமைத்துக் கொடுத்தால், அந்தப் பகுதி மக்களெல்லாம் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களையும் வாயார வாழ்த்துவார்கள். அக்கல்லூரியின் திறப்பு விழாவிற்கு சிறப்பாக ஏற்பாடு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் மற்றும் மாண்புமிகு அமைச்சர்களையும் வரவேற்பேன் என்ற உறுதியும் கொடுத்து, தயவுசெய்து அந்தக் கல்லூரியை அமைக்க நீங்கள் உதவி செய்யுங்கள் என்று கேட்டு, அமர்கின்றேன், நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கக்கூடிய திருநெல்வேலி மாவட்டத்தில், 2 அரசுக் கல்லூரிகளும், 11 அரசு உதவி பெறும் கல்லூரிகளும், 1 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியும், 15 சுயநிதிக் கல்லூரிகளும் என மொத்தம் 29 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. மாணவர்களுடைய சேர்க்கைக்கு ஏற்ப மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசானது தொடர்ந்து, அவர்கள் விரும்பும் பாடப் பிரிவுகளை ஆண்டுதோறும் கூடுதலாக வழங்கியதன் காரணமாக, கடந்த ஏழு ஆண்டு காலங்களில் 1,321 புதிய பாடப் பிரிவுகள் தொடங்கப்பட்டன. மாணாக்கர்கள் விரும்பும் பாடப் பிரிவுகளை அவரவர்கள் வசிக்கும் பகுதியிலே உள்ள கல்லூரியிலேயே சேர்ந்து படிக்கக்கூடிய வாய்ப்பை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசானது உருவாக்கித் தந்து கொண்டிருக்கிறது. ஆகவே, அவர் கோரிக்கை வைக்கின்ற பகுதியிலே புதிதாக ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தேவையில்லை என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, தேவையென்றால், மாணவர்களுடைய சேர்க்கைக்குக்காக*

2018 ஜூன் 1]

கூடுதலாக பாடப் பிரிவுகளைத் தொடங்கி, அந்தப் பகுதியிலே மாணவர்களுடைய சேர்க்கைக்கு வழிவகை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. சத்யா அவர்கள்.*

திருமதி ப. சத்யா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கும் காலை வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். கண்ணை மூடும் கடைசி நிமிடம் வரை மண்ணை ஆண்டு, மக்களின் மனதில் மாறாத இடம் பிடித்த மாதர் குல மாணிக்கம் தமிழகத்தின் மக்கள் எண்ணமெல்லாம் நிறைந்து நிற்கும் இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

எத்திசை சென்றாலும் 40 கி.மீ. சென்றால்தான் கல்லூரிக் கல்வியினைப் பெற முடியும் என்ற நிலை மாற, சுமார் 200 கிராம மக்கள் அன்றாடம் புழங்குகின்ற பண்ருட்டி நகரில் கிராமவாழ் மக்களின் பிள்ளைகளின் கல்வி நலனைக் கருத்தில்கொண்டு, கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஒன்றினை அமைத்திட அரசு முன்வருமா என தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய சட்டமன்றத் தொகுதி இருக்கக்கூடிய கடலூர் மாவட்டத்தில், ஏற்கெனவே 4 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், ஓர் அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரியும், 17 சுயநிதிக் கல்லூரிகளும் மற்றும் ஒரு பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியும் என மொத்தம் 23 கல்லூரிகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அந்த மாவட்டத்தில் புதியதாக ஒரு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி இந்த ஆண்டு முதல் செயல்படுவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசானது ஆணையைப் பிறப்பித்து, மாணவர்களுடைய சேர்க்கையை*

அதிகரிக்க பல்வேறு வகையிலே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதன் அடிப்படையிலே, அந்தப் பகுதியில் மாணாக்கர்களுடைய சேர்க்கை சதவிகிதம் கூடுதலாக இருக்கும்பட்சத்தில், இருக்கின்ற கல்லூரிகளிலே இடம் போதவில்லையென்றால், வரக்கூடிய காலகட்டங்களில் அரசானது அதுகுறித்துப் பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 105, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். செல்வராசு, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

105—

அங்கன்வாடி மையம்

***16618—திரு. எம். செல்வராசு:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, கிடாரம் ஊராட்சி, சூரம்பட்டியில் அங்கன்வாடி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களையும், தங்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி சட்டமன்றத் தொகுதி, தொட்டியம் ஒன்றியம், சூரம்பட்டியில் நடப்பு நிதியாண்டில் 8 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி மையக் கட்டடம் கட்டப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.